# 98. பாரதியார் கவிதைகளில் இயற்கை


செ.பவித்ரா,
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை,
நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி, தமிழ்நாடு, இந்தியா

முனைவர் ஆ. மகாலட்சுமி,
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்
நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி, தமிழ்நாடு, இந்தியா



## ஆய்வுச் சுருக்கம்

பாரதியார் தமது கவிதைகளில் வீரம் சுதந்திரம் பக்தி என அனைத்தைப் பற்றியும் கூறியிருக்கிறார்; தமது கவிதை நூலில் சொல்லாதவை ஒன்றுமே இல்லை என்பது நாம் அறிந்தவையே. சங்ககால மக்கள் இயற்கையோடு ஒன்றி வாழ்ந்ததை நாம் சங்க இலக்கிய கவிதைகளின் வழி காணலாம். சங்ககாலம் முதல் இன்றுவரை இயற்கையை வழிபடும் முறை நம் மக்களிடையே காணப்படுவதை பல இடங்களில் நம்மால் பார்க்கமுடிகிறது. இன்றைய கால சூழல் சற்று மாறி வந்தாலும் மக்கள் இயற்கையான உணவை உட்கொண்டு வாழவே விரும்புகின்றனர்.; நகரத்தில் வசிக்கும் மக்கள் திருவிழாகாலங்களில் அவர்கள் தங்கள் சொந்த ஊர்களுக்கும்; கிராமங்களுக்கும் வந்து இயற்கையை ரசித்து தனது குடும்பங்களுடன் மகிழ்ச்சியாகப் பொழுதைக் கழித்துவிட்டுச் செல்கின்றனர்.; இன்றைய மக்கள் மாறுபட்டாலும் காலச் சூழ்நிலைகள் மாறுவதில்லை. இவ்வாறு மாறாத இயற்கையைப் பற்றிப் பாரதியார் தமதுகவிதை நூலில் வர்ணிப்பதையும் போற்றிப் புகழ்வதையும் பற்றிக் கட்டுரையின் வாயிலாகக் காண்போம்.


## முன்னுரை

இயற்கை என்பது மரம், செடி, கொடி, மழை, இடி, மின்னல், புயல், சூரியன், சந்திரன் என அண்டத்தில் உள்ள பலவற்றையும் உள்ளடக்கிய ஒரு மாபெரும் சக்தியாகும். இந்த இயற்கையால் நாம் பல இன்பத்தையும்; மன அமைதியையும் அடையலாம்; அதேவேளையில் மனிதனால் உண்டாகும் தவறுகளால் இயற்கைச் சீற்றங்களை நம்மால் ஒன்றும் செய்ய இயழுவதில்லைமனிதர்களின் உடல் அமைப்பு இயற்கையால் படைக்கப்பட்டதாக இருப்பினும் மனிதர்கள் இயற்கையில் இருந்து மாறுபட்டே வாழ்கின்றனர். இயற்கை என்றாலே அழகின் உருவம் எனலாம். பச்சைப் பட்டாடை உடுத்திய பூமியையும், நீல மேகங்கள் சூழ்ந்த வானத்தையும் மனதில் எண்ணிப் பார்த்தாலே மனம் உற்சாகம் அடையும் இப்படிப்பட்டஉற்சாகத்தைத் தரக்கூடிய இயற்கையின் அழகைப் பாரதியார் கவிதைகளில் எவ்வாறு புகழ்ந்துள்ளார் என்பதைப் பற்றி இக்கட்டுரையின் வாயிலாகக் காண்போம்.

## பாரதியார் கவிதைகளில் இயற்கை

பாரதியார் தமது கவிதைகளில் ஞாயிறு, மழை, காற்று, கடல், மின்னல் போன்ற அனைத்தையும் போற்றிப் படைத்திருப்பதே நாம் அவரது கவிதைகளின் வழி காணலாம்

## ஞாயிறு

ஞாயிறு என்பது சூரியனைக் குறிக்கிறது. சூரியனைஒரு இயற்கைக் கடவுளாகவே நம் மக்கள் வணங்குகின்றனர்; முன்பு தோன்றி இன்று வரை பொங்கல் திருநாளில் நம் மக்கள் முதலில் சூரிய கடவுளையே வணங்குவதை நாம் இலக்கியங்களின் வழி அறியமுடிகிறது. அதே போல் இந்த ஞாயிற்றைப் பாரதியார் அவரதுவசனகவிதையில்.

"நீ ஒளி, நீசுடர், நீ விளக்கம், நீகாட்சி

மின்னல் ரத்தினம் கனல் தீகொழுந்து இவை எல்லாம் நினதுநிகழ்ச்சி

கண் நினதுவீடு
புகழ் வீரம் இவைநினதுலீலை
அறிவுநின் குறிஅறிவின் குறிநீ
நீசுடுகின்றாய் வாழ்கநீகாட்டுகின்றாய் வாழ்க
உயிர் தருகின்றாய் உடல் தருகின்றாய்" (வசனகவிதை.புகழ் ஞாயிறு - (2)

என்ற பாடலில் சூரியனை போற்றிப் புகழ்ந்துபாடி இருக்கின்றார்; இங்கு சூரியனின் ஒளியையும் மின்னல் போன்றவையே உனது நிகழ்ச்சி என்கின்றார் அத்துடன் புகழும், வீரமும் போன்றவை உனது லீலையால் நடைபெறுகின்றது. அத்துடன் நீஉயிர் தருகின்றாய் உடல் தருகின்றாய் நீவாழ்கஎன சூரியனின் செயலைப் புகழ்ந்துவாழ்த்துகின்றார் பாரதியார். இதேபோல், வைகறைப் பொழுதை ஒரு பெண்ணாகக் கொண்டு;,

"வைகறையின் செம்மை இனிதுமலர்கள் போலநகைக்கும் உஷை வாழ்க
உஷையைநாங்கள் தொழுகின்றோம் அவள் திரு
அவள் விளிப்புத் தருகின்றாள் தெளிவுதருகின்றாள்
உயிர் தருகின்றாள் ஊக்கம் தருகின்றாள்
அழகுதருகின்றாள் கவிதைதருகின்றாள்
அவள் வாழ்க" (வசனகவிதை ஞாயிறு-3)

என்ற வரியில் வைகறைப் பொழுதை ஒரு பெண்ணாகப் பாவித்து 'உஷை' என்ற பொருளில் பாடி இருக்கின்றார்.; மலர் போன்றவை பொழுது வாழ்க. அவள் நமக்கு தெளிவையும், ஊக்கத்தையும் தருகின்றாள் அழகையும் தருகிறாள். அத்துடன் கவிதையும் தருகின்றாள். அப்படிப்பட்ட அவளை நாம் தொழுவோம் என்று வைகறைப் பொழுதைப் பற்றி பாரதியார் பாடியிருக்கின்றார். இதேபோல் ஞாயிறு இருளைப் போக்குவதைப் பற்றிபாடி இருக்கின்றார். அதில்,

"ஞாயிறே இருளைஎன்னசெய்துவிட்டாய் ஓட்டினாயா?
கொன்றாயா? விழுங்கிவிட்டாயா?
கட்டிமுத்தமிட்டுநின் கதிர்களாகியகைகளால் மறைத்துவிட்டாயா?
இருள் உனக்குப் பகையா? அதுநின் காதலியா இரவெல்லாம் என்னை
காணாதமயக்கத்தால் இருண்டிருந்ததா?" (வசனகவிதைகள் ஞாயிறு-5)

என்னும் வரியில் சூரியனே! நீ இருளை என்ன செய்துவிட்டாய்? ஓடிவிட்டாயா அல்லது கொன்றுவிட்டாயா எனவும், இல்லை என்றால் கட்டிப்பிடித்து முத்தமிட்டு உன் கதிர்களால் மறைத்துவிட்டாயா? இருள் என்னஉனக்குப் பகைவனா எனவும், இரவெல்லாம் உன்னைக் காணாமல் அந்தமயக்கத்தினால் இருண்டு இருந்ததா என்றெல்லாம் ஞாயிற்றைக் கண்டுவிலகிய இருளைப் பற்றி கூறியிருக்கிறார். சூரிய ஒளியைப் பற்றிபாரதியார் தமது கவிதைகள்,

"ஒளியேநீ யார் ஞாயிற்றின் மகளாஅன்றுநீ
ஞாயிற்றின் உயிர் அதன் தெய்வம் ஞாயிற்றின்
இடத்தேநின்னைத்தான் புகழ்கின்றோம்
வடிவம் உடல் நீஉயிர்" (வசனகவிதை ஞாயிறு-6)

என்னும் பாடலில் சூரியனின் ஒளியைப் புகழ்ந்து பாடி இருக்கின்றார். அதில் ஒளியே நீ யார் சூரியனின் மகள் நீ ஞாயிற்றுஉயிர், சூரியனின் தெய்வம் நீ,நாங்கள் சூரியனிடம் உன்னுடைய ஒளியைப் பற்றியே புகழ்ந்து உரைக்கின்றோம். சூரியனின் வடிவமானது ஒரு உடலை போன்றது. நீயோ சூரியனுக்கு உயிரைப் போன்றவள் என சூரியனிடம் இருந்து தோன்றும் ஒளியைப் பற்றி கூறியிருக்கின்றார் பாரதியார். இந்த சூரியனை ரிக் வேதத்தில்

"எழுவீர் வந்துமீண்டும் வாழ்வும் உயிரும் சென்றது
இருள் தோன்றுகிறதுஒளிகதிரவனுக்காக
விழித்திருந்தால் உஷை நம் ஆயிலும்
உணவும் செழிக்கும் இனி" (ரிக் வேதம், முதல் மண்டலம், 113வது சூக்தம்)

என்ற பாடல் ஆனது அனைவரும் எழுவீர்கள் மீண்டும் வந்தது உயிரும், வாழ்வும் சென்றுவிட்டது இருள். தோன்றுகின்றது ஒளி என்றும் அத்துடன் கதிரவனுக்காக தனது வலியைத் திறந்து இருக்கின்றாள் வைகறை எனரிக் வேதத்தில் சூரிய உதயத்தைப் பற்றி கூறியிருப்பதைக் காணலாம்.

**மின்னல்**

மின்னல் என்பது இரு மேகங்கள் மோதும் போது ஏற்படும் ஒரு நிகழ்வு ஆகும் இந்த நிகழ்வின் போது ஏற்படும் ஒளியையும், பெய்யும் மழையையும் பற்றிப் பாரதியாரின் கவிதையில்,

"மழைபெய்கிறது; காற்றுஅடிக்கின்றது
இடிகுமுறுகின்றது; மின்னல் வெட்டுகின்றதுபுலவர்களே,
மின்னலேபாடுவோம் வாருங்கள்
மின்னல் ஒளிதெய்வத்தின் ஒருலீலை
அதனையவனர் வணங்கிஒளிபெற்றனர்
மின்னலைதொழுகின்றோம்" (வசனகவிதை ஞாயிறு-13)

என்ற பாடலில் மழைபெய்யும் போது ஏற்படும் மின்னலையும்,; அதன் ஒளியைப் பற்றி பாடி இருக்கின்றார்.; மழைபெய்யும் போது காற்று அடிக்கிறது. இடி இடிக்கிறது. மின்னல் வெட்டுகிறது. புலவர்களை இந்த மின்னலைப் பற்றிப் பாடுவோம் வாருங்கள். மின்னலால் ஏற்படும் ஒளியானதுஒளிதெய்வத்தின் ஒருதோற்றம் ஆகும். இந்த மின்னல்களை கிரேக்கர்களானயவனர்கள் வணங்கித் தங்கள் வாழ்வில் ஒளிபெற்றனர். எனவே இந்த மின்னலை நாமும் தொழுவோம் என்றுமின்னலைப் பாடி இருக்கின்றார். இதேபோல்,

"சேழ் கிளர் உத்திஅரவுத் தலைபனிப்ப,
படுமழைஉருமின் உரற்றுகுரல்
நடுநாள் யாமத்தும் தமியம் கேட்டே." (நற்றிணை -129)

என்ற பாடலில் தோழி! காதலர் ஒருநாள் நின்னைப் பிரியினும் நின் உயிரின் தன்மை வேறுபடுகின்ற பொலிவுற்ற கூந்தலையுடையாய்! பெருநகைகேளாய் யாவரும் பெரிதும் நகைக்கவல்ல ஒரு செய்கையைக் கேட்பாயாக!; நம்மை அவர் இங்குநீங்குமாறுகைவிட்டுத் தாம் ஒருவரே தமியராய் வினைவயிற் செல்லக் கருதியுள்ளார் என்று உழையர் கூறாநிற்பர். அவர் தனியே சென்று தமது வினைமுடித்து வருமளவும்; நிறம் விளங்கிய படப் பொறியையுடைய அரவினது தலை நடுங்கும்படி பெய்கின்ற மழையிடையிட்ட இடியினது முழங்குகின்ற முழக்கத்தை; இரவு நடுயாமத்துதமியமாய் இருந்து கேட்டு நாம் நமது மனையின் கண்ணே அதன் மேலும் உயிர் வாழ்ந்திருக்க கடவேமென்றுங் கூறா நிற்பர்; இஃதென்ன கொடுமைகாண்! என்ற இந்த இடத்து மழைக் காலத்தில் தோன்றும் மின்னலையும், இடியையும் பற்றி அவ்வையார் பாடியிருக்கக் காண்கின்றோம்.

**காற்று**

காற்று என்பது வளி மண்டலத்தில் வலிமங்கள் பெருமளவில் நகரும்போது அது காற்று எனப்படுகிறது.இந்தக் காற்றானது இயற்கையின் ஒரு நிகழ்வுஎனலாம். பஞ்சபூதங்களில் காற்றும் ஒன்றாகும். இந்தக் காற்றைப் பற்றிப் பாரதியார் அவரது வசன கவிதைகள்,

"உயிர் தான் காற்று
உயிர் பொருள் காற்றுஅதன் செய்வேன்
பூமித்தாய் உயிரோடு இருக்கிறாள் அவளுடைய
மூச்சேபூமியில் உள்ளகாற்று
காற்றேஉயிர் அவன் உயிர்களைஅழிப்பவன்
காற்றேஉயிர் எனவேஉயிர்கள் அழிவதில்லை" (வசனகவிதை-காற்று - 5)

என்ற பாடலில் உயிர் தான் காற்று பூமித்தாயின் மூச்சு பூமியில் உள்ள காற்று. காற்று தான் உயிர் என காற்று மனிதனுக்கு இன்றியமையாதது என்பதை விளக்கும்படி கவிதைப் படித்திருப்பதைக் காணலாம். இதேபோல்,

"காற்றேவாமகரந்ததைதோலைசமந்துகொண்டு
முனதைமயஹுறுத்துகின்ற இனிய
வாசனையுடன் வா
இலைகளின் மீதும் நீர் அலைகளின் மீதும் உராய்ந்து
மிகுந்தப்ராண
ரஸத்தைஎங்களுக்குகொண்டுகொடு
காற்றேவா" (வசனகவிதை.காற்று -6)

என்ற வரிகளில் காற்றே! இங்கு வாமலரில் உள்ள மகரந்த தூளை சுமந்துகொண்டு காற்றே! முனதை மயக்கும் வாசனையுடன் இனியகாற்றே இங்குவா. இலைகளின் மீதும் நீரின் மீதும் ஒர் உராய்ந்து கொண்டும் மிகுந்த ரஸத்தை எங்களுக்குக் கொண்டு வா. என்று இயற்கையான சூழலில் இருந்து காற்றை ரசிக்கும் போது ஏற்படும் காற்றின் இனிமையைப் பற்றிபாரதியார் கவிதையில் ஏற்றி இருக்கிறார். காற்றைப் பற்றித் திருக்குறளில் வள்ளுவர்,

"அல்லல் அருள் ஆள்வார்க்கு இல்லைவளிவழங்கும்
மல்லல்மாஞாலங் கரி" (குறள் - 245)

எந்த குறளில் அருள் உடையவர்க்கு இவ்வுலகில் துன்பம் என்பது வராது. காற்றே உலவும் வளம் மிக்க பேருலகமே இதற்குச் சான்று என்கின்றார் வள்ளுவர். இதேபோல் குறுந்தொகையில்,

"வெந்திறற் கடுவளிபொங்கர்ப் போந்தென
நெற்றுவிளையுழிஞ்சில் வற்றலார்க்கும்
மலையுடையருஞ்சுரமென்பநம்
மலையிடைமுனிநர் சென்றவாறே"(குறுந்தொகை-39)

என்ற இடத்தில் அய்யகோ பெருங்காற்றுவந்ததால் நான் உதிர்த்து வைத்திருக்கும் பொங்கர்ப் பூக்களையெல்லாம் அள்ளிச் செல்கின்றனவே என்று வாகை மரத்தின் கிளைகள் கலகலக்குமாம். அதேபோல் என்னைத் தழுவியவர் அந்தச் சூறாவளிவீசும் காட்டில் சென்றிருக்கிறாரோ என்று தலைவன் பிரிவை கூறும் அவ்வையார் காற்றின் தன்மையைப் பற்றிக் கூறியிருப்பதைக் காணமுடிகிறது.

**கடல்**

கடல் என்பது உப்பு நீர் கொண்ட நீர் நிலையாகும். இந்தக் கடலைப் பற்றி பாரதியார்,

"கடலேகாற்றைப் பரப்புகின்றது
விரைந்து சூழலும் பூமிப்பந்தில் பள்ளங்களிலே
தேங்கியிருக்கும் கடல்
நீர் அந்தச் சுழற்சியிலேதலைகீழாகக் கவிழ்ந்துதிசைவெளியில் ஏன்
சிதறிப் போய்விடவில்லை" (வசனகவிதை - கடல்(1)

என்றபாடலில் கடல்தான் காற்றைப் பரப்புகிறது. பூமி மீது உள்ளபள்ளங்களின் மீது தேங்கி இருக்கிறது கடல். கடல் ஏன் பூமிதலை கீழாகச் சொல்லும்போது சிதறி விழாமல் இருக்கிறது என வினவி அதுக்கு அவரே விடையாகப் பராசக்தியே இவ்வாறு கீழே விழாமல் காக்கிறாள் என விடையும் கூறுவதைக் காணமுடிகிறது. அதேபோல் சங்க இலக்கியங்கள் பலவற்றில் கடலைப் பற்றிவர்ணித்துப் பாடி இருக்கின்றனர் நம் மூதாதையர்கள். ஐவகை நிலங்களாக கூறப்படும் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலைஎன்னும் ஐந்துநிலங்களில் நெய்தல் என்பது கடலும் கடல் சார்ந்த இடமுமே ஆகும். முற்காலமக்கள் கடலை நம்பியே வாணிபம் செய்து வந்ததை நமது இலக்கியங்களின் வழி காணக்கிடைக்கின்றன. இந்தக் கடலை வள்ளுவர்,

"கடலோடாகால்வல் நெடுந்தேர் கடலோடும்
நாவாயும் ஓடாநிலத்து" (குறள் -496)

என்ற குறளில் வலிய சக்கரங்களை உடைய பெரிய தேர் ஆனது கடலில் ஓடாது. கடலில் ஓடுகின்ற கப்பல்களும் நிலத்தில் ஓடாது. இவ்விடத்தில் கடலைப் பற்றி கூறியிருக்கின்றார் வள்ளுவர். கடலில் செல்லும் கப்பல் நிலத்தில் செல்லாது நிலத்தில் செல்லும் தேர் கடலில் செல்லாது என்பதையாவது ஒரு இடத்திற்குச் செல்லும் போது அறிந்திருக்க வேண்டும் என்று வள்ளுவர் இரண்டே வரியில் உரைக்கிறார். பாரதியார் கவிதைகளில் கூறப்பட்டுள்ள இயற்கையாக உள்ள கடல், காற்று மின்னல் ஞாயிறு போன்றவற்றைப் பற்றியும் அவற்றுக்கான சான்றுகளையும் இக்கட்டுரையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

**முடிவுரை**

இயற்கை என்பது மனிதனுடன் இரண்டறக் கலந்தவை என்பதைநாம் முன்னமே கூறினோம். இன்றைய காலத்தில் நாகரிக வளர்ச்சி ஆழம் அனைத்தும் நகரமயமாக்கப்பட்டு வருவதாலும் மரங்களை அழிக்கின்றனர். அத்துடன் கனிம வளங்களை அள்ளிக் கொள்கின்றனர். அதனால் இயற்கையின் செயல்களில் நாம் பலமாற்றங்களான புயல், வெள்ளம், வறட்சி போன்றவற்றைக் காண முடிகிறது. இயற்கையின் அழகை சங்க இலக்கியங்கள் போன்ற பல இலக்கியங்களின் படிப்பதின் மூலமே அறிந்து கொள்ள முடிகிறது. மரம், செடி, கொடி, கடல், சூரியன், காற்று, ஆகாயம், நிலா, பறவைகள், விலங்குகள் என அனைத்தும் கடவுளால் படைக்கப்பட்ட இயற்கையாகும். இவை எவ்வாறு எங்கு இருந்து வந்தனை என்பதை நம்மால் அறிய முடியத ஒன்றாகும். இவ்வாறு அழகான இயற்கைப் பற்றி பாரதியாரின் கவிதைகளில் சிறப்புப்படுத்தியுள்ள விதத்தைப் பற்றி இக்கட்டுரையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

## தொகுப்புரை

1. சூரியனைப் பற்றிபுகழும் வீரமும் உனதுவேலைதான் என்று புகழ்ந்துரைப்பது பற்றி எடுத்துரைக்கப்பட்டுள்ளது.
2. சூரியனில் இருந்து வரும் ஒளியானது சூரியனிற்கு உயிரைப் போன்றது என சூரிய ஒளியைப் பற்றிப் பாரதியார் கவிதை வழி எடுத்துரைக்கப்பட்டுள்ளது.
3. கிரேக்கர்கள் வணங்கி ஒளிபெற்ற மின்னலைப் பற்றி நாமும் பாடுவோம் வாருங்கள் என பாரதியார் புலவர்களை அழைக்கும் விதத்தைப் பற்றியும் இங்கு கூறப்பட்டுள்ளது.
4. உயிர் தான் காற்று. காற்றுதான் உயிர் எனகாற்றின் முக்கியத்துவத்தை பாரதியார் தமது கவிதைகளில் உணர்த்தி இருப்பதைப் பற்றி கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.
5. பூமிசுழலும் போது கடல் நீர் சிதறாமல் இருப்பதற்குப் பராசக்தி தன் தலையில் சுமந்தேன் நம்மை பாதுகாக்கின்றாள் என கடல் நீரைப் பற்றிபாரதியார் அவர்களது கவிதைகளில் கூறியுள்ள பான்மையை பற்றி எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

## துணைநின்ற நூல்கள்

1. முனைவர். க.உஷாராணி, பாரதியார் கவிதைகள் மூலமும் தெளிவுரையும்
2. முனைவர் க.உஷாராணி, பாரதியார் கவிதைகள் மூலமும் தெளிவுரையும் தொகுதி-1, முதற் பதிப்பு-2019.
3. திருக்குறள், பரிமேலழகர் உரை, அழகுபதிப்பகம், காரைக்குடி. தொகுதி- 2, முதல் பதிப்பு- 2019.
4. முனைவர் வி. நாகராசன், உரையாசிரியர், குறுந்தொகை, ஐந்தாம் பதிப்பு- 2013.
5. கு.வே. பாலசுப்பிரமணியன், உரையாசிரியர், நற்றிணை, ஆறாவதுபதிப்பு- 2017.
6. ரிக்வேதம்